விலை ரூபா 5.00 Registered as a News Paper in Sri Lanka பக்கம் எட்டு

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் இரவாந்துறைப் படிப்பகம்

# வலம்புரி
VALAMPURI

மங்கையர் மனம் கொள்ளை கொள்ளும் தங்க நகைகளுக்கு
சாரங்கா
நகைமாடம்
177/4கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P;- 2480

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆவணி 5 புதன்கிழமை (21-8-2002) தொலைபேசி 3378 ஒலி 245

# தலைவர் பிரபாவை இந்தியாவிடம் இலங்கை ஒப்படைக்க வேண்டும்

## வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு

(புதுடில்லி)

**தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை இந்தியாவிடம் இலங்கை அரசு ஒப்படைக்க வேண்டும் என்பதில் எந்த மாற்றமும் இல்லை' இவ்வாறு இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங்கா தெரிவித்துள்ளார்.**

புதுடில்லியில் நேற்றுசெய்தியாளர்களுடன் பேசும்போதே அமைச்சர்ஜஸ்வந்சிங்கா இதனைத் தெரிவித்தார்.

இலங்கை இன விவகாரம், அமைதி முயற்சி குறித்து கருத்து வெளியிட்ட அமைச்சா மேலும் தெரிவிக்கையில்;

விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை, இலங்கை அரசாங்கம்இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டுமென்று, இந்திய அரசாங்கம் கோருவதும், இலங்கைஅரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று, இலங்கையில் சமாதானம் ஏற்பட வேண்டுமென்று, இந்தியா விரும்புவதும், இரு வேறுபட்ட தன்மைகளையுடைய விடயங்கள் ஆகும்.

புலிகளின் தலைவரை இலங்கைஅரசாங்கம் இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டுமென்ற கோரிக்கையில் மாற்றம் ஏற்படாது.

இதனை இலங்கை அரசாங்கம் நன்கு அறிந்து வைத்துள்ளது

இதனால் புலிகளின் தலைவரை இந்தியாவிடம் ஒப்

(8ம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றை கலைப்பதில்லை
## சபாநாயகருக்கு ஜனாதிபதி கடிதம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தை ஒருபோதும் கலைக்கமாட்டேன் என்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா மீண்டும் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் ஜோசப்மைக்கல் பெரேராவுக்கு ஜனாதிபதி சந்திரிகா கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது கடிதம் நேற்று பாராளுமன்றில் வசிக்கப்பட்டது

அரசாங்கம் நம்பிக்கையில்லாப் பிரேரணை வரவு செலவுத் திட்டம் மற்றும் நிதிச்சட்டமூலங்களில் பெரும் பலத்தை நிரூபிக்கத் தவறினாலேயே பாராளுமன்றத்தைக் கலைக்க வேண்டிய நிலைமை ஏற்படும்

ஆனால் தற்போதையநிலையில் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதால் பாராளுமன்றத்தை ஒருபோதும் கலைக்கப்போவதிலலை

கடந்த மூன்றுவருடகாலத்தில் மக்கள் இரண்டு பாரா

(8 ம் பக்கம் பார்க்க)

## நாரந்தனை தாக்குதல்
## வேலணைபி.ச.தலைவருக்கு

அன்புவாசகர்களே,
தவிர்க்க முடியாத
காரணத்தால்

## உள்துறை அமைச்சர்மீது நம்பிக்கையற்ற பிரேரணை இன்றுவாக்கெடுப்பு

(கொழும்பு)

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்காவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் இன்றுவாக்கெடுப்புக்கு விடப்படவுள்ளதை அடுத்து வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவின் நேபாள விஜயம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

நேபாளதலைநகர் காத்மண்டுவில் சார்க்நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் மாநாடு இன்று ஆரம்பமாகி நாளைவரை தொடர்ந்து நடைபெறவுள்ளது

இம்மாநாட்டின் இறுதி நாள் நிகழ்வில் கலந்துகொள்ளும் முகமாக பிரதி அமைச்சர் லால்கமகே காத்மண்டுர் செல்லவுள்ளா (த)

## அமெ. இராஜாங்க செயலர் நாளை யாழ். வருகிறார்

(கொழுப்பு)

அமெரிக்கப் பிரதிநிதி இராஜாங்கச் செயலாளர் றிச்சட் அமிக்சேஜி நாளை யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார்.

அமெரிக்காவில் இருந்து புறப்படும் அமிக்கேஜி கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்து, அங்கிருந்து நேரடியாக விசேட விமானத்தில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார்.

யாழ். குடாநாட்டில் இடம்பெறும் மிதிவெடி அகற்றும் பணிகளை நேரடியாகப் பார்வையிடும்நோககிலயாழ். வரும் இராஜாங்கச் செயலர் யாழ். செயலகத்தில் சந்திப்பொன்றிலும் கலந்து கொள்வார்.

நான்கு நாள் பயணமாக இலங்கை வரும் அவர், பிரதமர், ஜனாதிபதி, அரசியல் பிரமுகர்கள் ஆகியோரைச் சந்திக்கவும் திட்டமிட்டுள்

(8 ம் பக்கம் பார்க்க)

## உலகவங்கி அதிகாரிகள்குழு அடுத்தவாரம் யாழ். விஜயம்

(கொழும்பு)

உலகவங்கி அதிகாரிகள்குழு மூன்றுநாள் விஜயமொன்றை

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, வயாவிளான மகா

# வேலணைபி.ச.தலைவருக்கு நீதிமன்றம் பிணை அனுமதி

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் தமிழ்க்கூட்டமைப்பினர் மீது, நாரந்தனையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று யாழ். மாவட்ட நீதிமன்றில் மேலதிக நீதிபதி திருமதி எஸ். இளங்கோவன் முன்னிலையில் நடைபெற்றது.

இச்சம்பவத்தில் சந்தேக நபரான செபஸ்ரியன் றமேஸ் (நெப்போலியன்) தொடர்ந்தும் தலைமறைவாக இருப்பதால், அவரைக் கைது செய்யுமாறு நீதிபதி பிடியாணை பிறப்பித்தார்.

அன்ரன்ஜீவராஜா (ஜீவா)

(8ம் பக்கம் பார்க்க)

---

அன்புவாசகர்களே,

தவிர்க்க முடியாத காரணத்தால் உங்கள்

**சங்குநாதம்**

**23-08-2002**

வெள்ளிக்கிழமை வெளிவரும் இதனால் வாசகர்களுக்கு ஏற்பட்ட சிரமத்திற்கு வருந்துகிறோம்.

(ஆ-ர்)

---

(கொழும்பு)

உலகவங்கி அதிகாரிகள்குழு மூன்றுநாள் விஜயமொன்றை மேற்கொண்டு எதிர்வரும் 26ம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளது.

யாழ். மாவட்டபாடசாலைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய புனரமைப்புவேலைகள் தொடர்பான மதிப்பீடுகளை உலகவங்கிக்குழுவினர் மேற்சொள்ளவுள்ளனர்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, வயாவிளான மகா வித்தியாலயம், சாவகச்சேரி இந்துக்கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி ஆகியபாடசாலைகளுக்கு குழுவினர் நேரில் சென்று சேதங்கள் தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகளை பிரதமரின் ஆலோசகர் சி. குணசிங்கம் மேற்கொண்டுள்ளார்.

(த)

---


**இதோ உங்கள் உற்றதுணையானசுபாசிறி கடன்பற்றிய விபரங்கள்**

ஹற்றன் நஷனல்

**சுபாசிறி**

சொந்தத் தேவைகளுக்கான கடன் திட்டம்

- ★ ரூ.25,000/- முதல் ரூ.400,000/- வரை கடன் வசதி பெறலாம்
- ★ மூன்று வருடங்கள் வரை மீளச் செலுத்தும் வசதி
- ★ கவர்ச்சிகரமான வட்டி வீதம்
- ★ எழுத்து வேலைகள், பத்திரப்படுத்தல்கள் குறைவு

மேலதிக விபரங்களுக்கு HNB யாழ்ப்பாணக் கிளையை நாடுங்கள்

**உங்களுக்கென்றே வடிவமைக்கப்பட்ட, உங்கள் தேவைகளுக்கெல்லாம்கைகொடுக்கும் தனிப்பட்ட கடன் திட்டம்**

**ஹற்றன் நஷனல் வங்கி**

உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

யாழ்ப்பாணக் கிளை

இல.212, 214,ஆஸ்பத்திரி வீதி

தொலை பேசி: 021 - 2787, 021 - 3463 தொலை நகல்: 021 - 3194.


**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**



# செல்வச்சந்நிதி தேர்த்திருவிழா சிறப்புமலர் (21-08-2002)

## ஆசி உரை

தொண்டைமானாறு ஆற்றங்கரையில் பூவரசத்தடி செல்வச்சந்நிதியான் முருக பக்தர் கதிர்காமருடன் உறவாடி மந்திரசகிதம் ஆகமவிதிகளில்லாப் பரிபூரணபக்திக்கு கதிர்காமத்தை நிகர்த்த மோனபூசை செய்யப்(வாய் கட்டி)பணித்ததன் பேரில் அன்றுதொட்டு செல்வச்சந்நிதி பூசைபுனர்க் காரசோடோபசாரப் பெருவிழாக்கள் கொண்டு அத்துவிதஆத்மிசக் கைங்கரியங்கள் நடைபெற்று வருவது உலகமறிந்த உண்மை

ஓசைஒலியெலாமான இசை வடிவான இறைவன் தமிழ்ச் சங்கத்தலைவன மட்டுமா ஆற்றங்கரையான் எனும் பொருத்தப்பாட்டின் (ஆன்மாகப்)பக்தர்களை அவரவர் கண்மக்கணித நோக்கில் ஆற்றுப்படுத்தி உய்திபெறச் செய்யும் தமிழ்கடவுள் தங்க மயில்வாகனன் தங்கவேற் பெருமாள் செல்வச்சந்நிதிக் கந்தன் கதியற்றார்க்குச் கதியாய் பெருநிதியாயாய் துன்பம் துடைத்து நிம்மதியாய் இருக்கச் செய்யும் தேவர்குறைதீர்த்த சேனாபதி,சேந்தன் கந்தன் செங்கோட்டு வெற்பன்எம்மனதில் என்றும் நீங்காதுநின்று ணர்த்தி அருள்சுரக்கும் கருணைக்கடல் இன்றுதேர்பவனி வருகின்றார்

ஆன்மாக்களைப் பரீட்சார்த்தம் செய்துதேர்வுசெய்து அதன்பின்தீர்வு தருவார்-துன்பத்தைத் தீர்த்தோம்என்று நாளைய தீர்த்த உற்சவத்துடன் திருப்திகாணச் செய்வார்.


இந்நேரத்தில் எம்செல்வச் சந்நிதியானின் அருள்மழையில் நனைந்து அவன்நினைவன்றிப் பிறிது வேலை இலைஎன மனதினை கூம்பச்செய்து கும்பிட்டு தம் உடலினை வணங்கி (வளைத்து)வணங்கிப் பாத தாமரையைத் தம்சிரசில் சூட்டிப் பயன்படுத்தும் ஆத்மாக்கள் தேர்வடம்பிடித்து அரோகரா என்றும் திருமுருகனுக்கு அரோகரா செல்வச் சந்நிதிக் கந்தனுக்கு அரோகரா ஆற்றங்கரையானுக் அரோகரா என்று வழுத்திக் காவடி எடுப்போரும் கற்பூரச் சட்டி எடுப்போரும் தூக்குக் காவடி எடுப்போரும் பிரதிட்டை செய்வோரும் அடியழிப்போரும் பஜனை பாடுவோரும் என்று பக்திப்பனுவலில் பல்துறையிலும் பரந்துபட்டுக் குழுவாக இயங்குவோரை இறையருள் இயக்குவிப்பதையும் பார்க்கும் மண்விண் உலகத்தோர்கண் (ணீர்) மழை,மலர் மழைபொழிந்து ஆனந்தப்பரவசத்தில் இருப்டர் என்பது மறைக்கமுடியாத மாபெரும் உண்மை

## தேர் விருத்தம்

தேர்க்சந்தனையே நம்மனது நம்பநிதம்
திரிகரண சுத்தாத்ம தாபமாய் நிர்விகற்ப
நெக்குருகு சித்தம் நந்தா விளக்கை
யெக்காலும் தனதுட் தசவாயு நாட்டிப்
பக்திபண்ண நிச்சயம் கண்டாபணி மேயாசை
யுலகாள வல்கோள் பனுவல் செயநீ
புக்குஸ்ரீ செம்மன சாம்பஸ்ரீ சிவசம்பு
ஓம் ஸ்ரீ செல்வச் சந்நிதியே

ஓர்முருகபக்தர் மனதில் உதித்ததை இங்கேதந்து இவ்வாலய பிரதமகுருவாய்ச் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இறைக்கட்டளைப்படி பணியாற்றும்எனதுமுரு கமனமுவந்த ஆசிச்செய்தியினை இத்துடன்தந்து அமைகின்றேன்.

இவண் முருகபணியில்
ஆறுமுகசாமிஐயர்
சிவசண்முகசாமிஐயர்
பிரதமகுரு செல்வச்சந்நிதி தொண்டைமனாறு



நிர்வாகக் குருவின்

## ஆசிச் செய்தி

ஆற்றங்கரையில்குடிகொண்டிருக்கும் செல்வச்சந்நிதியானுக்கு இன்று தேர் உற்சவம் நடைபெறுகிறது.

பல்லாயிரக் கணக்கானோர் உற்சவகாலங்களில் வந்து வணங்கி இலயப்பட்டஆலயம் சந்நிதியான் ஆலயமாகும்.

மோன பூசையுடன் சோடோபசாரப பெருவிழாவாக மாறுபட்ட பல விசேட அம்சங்கள் பொருந்திய பெருவிழாவாகத் தேர்த்திருவிழா நடைபெறுகிறது.

பூவரச மரத்தைக் கொண்டதுமான இக்கோயில் ஆலியையில் அமுது படைத்து பூசை செய்து பக்தகோடிகளின் வேண்டுதல்களையெல்லாம் சந்நிதியானிடம் பெறுகிறார்கள்.

இவ்விழா மக்களெல்லாரினதும துன்பங்களை நீக்கும் திருவிழாவாகும்.

நிர்வாகக்குரு
ஆறுமுகஐயர்
லோகேஸ்வரஐயர்

மலரமைப்பு
சந்திரமோகன்

## செல்வச்சந்நிதிசிவகுருபர

பல்லவி

அருள் நிதியே ஆறுமுகனே
என் மன
பருள் கிழிய வேல்விடவல

(அருள்

அனுபல்லவி

இருள் விதியே இற்றழித்தே
எம் மனம்
தெருள பெறவே வேல்விடவல

(அருள்

சரணம் 1

பொருள் நிதியே பரகுருபர
தெருள் நிதியே சரவணபவ
அருள் நிதியே ஆறுமுசகுக
செல்வச் சந்நிதியே சிவகுருபர

(அருள்

### திவ்யாதங்கன்

பல்லவி

நீ யன்றி யார் வருவார்
நீலமயில் வாகனா முருகா

(நீ

அனுபல்லவி

தீயின்று சூழ்ந்ததையா
தாய்த் திரு நாடுகாக்க

(நீ

சரணம் 1

சீ யென்று சொன்னவரும்
சீ ரன்று என்றவரும் இன்று
தீரென்று பேசவைக்க எமைச்
சீரொன்றி வாவைக்க

(நீ

சரணம் 2

போரின்று வேண்டாமையா
பேரொன்று (முன்)கண்டோமையா
தேரின்று வடம் பிடித்தோம் நல்
தீர்வினைத் தந்திடு

(நீ

### வ. ஆ, தங்கமயில் சைவப்புலவர்

பல்லவி

அறு முகனே சரணம்
உறு வினை தீர்த்தருள்

(அறு

அனுபல்லவி

அறு படை வீடுடை
சிறு முருகா குகா

(அறு

சரணம்

தறு குறும் பான இவ்
வுறு கலி பேருடல்
அறு சூர்மார்பதாய்
அறு முகப் பெயரென

(அறு

-ஆதங்கன்

## மலர் சிறப்புற வாழ்த்துவோர்


அழகிற் சிறந்த தங்கநகைகளுக்கு சிறந்த இடம்
**ஜனனி நகைமாடம்**
தங்க நகை வியாபாரம்
பிரதான வீதி, மருதடி, பருத்தித்துறை.

**'கோபாலா'**
சர்வதேச தொலைத்தொடர்பு சேவை
இரவு பகல் சேவை குறைந்த கட்டணத்துடன் பெற்றுக்கொள்ளலாம்
உள்நாட்டு தொலைபேசி:
070-212372
070-212693 பக்ஸ் 070-21237
070-212958 ஆலடிச்சந்தை, மந்திகை

துவாரகை தொலைத்தொடர்பு சேவை
அன் றொக்சி மணப்பந்தல் சேவை
வீடுகளிலிருந்து நீங்கள் நினைத்த இடங்களுக்கு தொலைபேசி
சேவையை பெற நாடவேண்டிய இடம்
தொலைபேசி இயக்கம்: 070-212374
லூர்த்து மாதா கோவிலடி, தும்பளை, பருத்தித்துறை

**கட்டைவேலி நெல்லியடி**
பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்
உங்கள் தேவை எங்கள் சேவை
பிரதானவீதி, நெல்லியடி.
தலைவர், பொதுமுகாமையாளர், ஊழியர்கள்.

சிறீ பத்மநாதன் தொலைத்தொடர்பு நிலையம்
தொலைபேசி இலக்கம் - 070-212920
வதிரி கரவெட்டி

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்
உங்கள் தேவைகளுக்கு எங்கள் கிளைகளை நாடுங்கள்
தம்பசிட்டி, பருத்தித்துறை.
தலைவர், பொதுமுகாமையாளர், பணியாளர்கள்.

லக்ஷ்மி கணபதி சர்வதேச தொலைத்தொடாபு நிலையம்
உங்கள் இல்லங்களிலிருந்து தொடர்புகளை 24மணி நேரமும்
பெற்றுக்கொளள நாடவேண்டிய இடம்
இலட்சுமணன் தோட்டபிள்ளையார் கோவிலடி, தும்பளை பருத்தித்துறை

நற்குணம் தொலைத்தொடாபு சேவை
24 மணிநேரமும் உங்கள் தொடர்புகளுக்கு
தொலைபேசி: 070 - 213071
தம்பசிட்டி, பருத்தித்துறை.

**யோகாஸ் கிறீம் ஹவுஸ்**
பிரதான வீதி, மந்திகை.
உற்சவ காலத்தில் ஆலய முன்றலில்

**ஜெயா நகைமாடம்**
நெல்லியடி, பருத்தித்துறைவீதி.

**ஸ்ரீ கிருஷ்ணா**
நெல்லியடி, கொடிகாமம்வீதி.

## நல்லூரான் திருவடிக்கு - 9



### வந்தெமக் கருள் செய்வாயே!

சிறைதனி லிருந்து வாடிச்
சிந்தைநொந் தலறிச் சோர்ந்த
கறையிலாக் கீரன் றன்னைக்
கருணையால் மீட்டாய் துங்கப்
பிறையணி டரம னார் தம்
பிரிய நற் சுதனே ஆதி
மறைபுகழ் நல்லைக் கந்தா!
வந்தெமக் கருள்செய் வாயே!

''சமூகரத்தினம்'' எம். கே. இளையப்பு ஜே. பி.

### கவின் நிறை கோயில் கொண்டீர்

கலைஞான உணர்வுடையார்கள் களிப்ப
கருத்தோடு நின்அடியே
கலையாத சிந்தை உள்ளார் சிந்தித் தேத்த
கவின் நிறை நல்லை கோவில் கொண்டீர்
மலையெனவே துயர் துன்பம் எதுவந்தாலும்
மனம்தளரோம் மறலிதானும்
சிலையுடனே எம் முடிவு கூறிவந்தால்
சிரித்துநிற்போம் முருகா உன் நாம்சொல்லி

நயினை, திருமுருக மாமணி

### பட்ட துன்பம் போதும்

நல்லூர்க் கந்தா நலம் அருள்வாய்
நல்லாய்ச் சமாதானம் நீடித்து நிலைக்கவே!
பொல்லாப் போரினால் பட்டதுன்பம் போதும்
எல்லாரும் இந் நாட்டில் நல்லாய் வாழவே!

இனங்களுக் கிடையே சமத்துவம் ஓங்க
எல்லா மக்களும் மகிழ்ச்சியாய் வாழ
தினம் தினம் நாட்டின் பொருள்வளம் வளர
தித்திக்கும் சிங்கப்பூர் ஆகஎம் நாடு!

ஏ. சிவமூர்த்தி இணுவில்.

### நல்லூரின் நாயகனே...!

ஈரம் கொண்ட மனதாலே
ஈழம் சிறக்க அருளையா?
வீரம் கொண்ட வேலாலே
வீணர் செயலினை அழியையா?
தீரம் கொண்ட நெஞ்சாலே
தீர்த்திடு எங்கள் துயரினை! மனப்
பாரம் கொண்ட எங்களின்
பாவம் யாவும் நீக்கிடையா!

வதிரி, த. அஜந்தகுமார்

### பதிஞான பண்டிதனே

கற்பும் கடிமணமும் காட்டி இருமாதர்
பற்றில் பதிஞான பண்டிதனே - உற்றமண்ணில்
சுற்றும் தறுதலைகள் தூர்த்துகிறார் மாதரினை
அற்று அவரை அழி

நயினைச் சோதி

### சுமையைக் குறைப்பாய்

நல்லூர்ப்பதியின் நாயகனே கந்தனே
நஞ்சுண்ட கண்டரின் மைந்தனே - உனைத்
தஞ்சமென வந்தடையும் தமிழ் அப்பா
நெஞ்சங்களின் சுமையைக் குறைப்பாய் குமரப்பா

நானிலம் போற்றும் நல்லைநகர் நாதனே-உனை
நாடிவரும் அடியார்க்கு நலமளித்து
நாட்டில் நல்லாட்சி நடைபெற நீயும்
நல்லருள் புரிவாய் நல்லூர் முருகா

நயினை, முத்து

* * *

# குடாநாட்டு இளைஞர் - யுவதிகளின் வினைத்திறன்பயிற்சித்தேவைமதிப்பீடு

(ஈச்சமோட்டை)

வடக்கு-கிழக்கிலுள்ள உயர் கல்வி பெறாத இளைஞர், யுவதிகளின் வினைத் திறனுடைய பயிற்சித் தேவையை மதிப்பிட்டு அதற்கேற்ப பயிற்சித் திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்காக வினாக் கொத்துக்கள் மூலம் ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மனித மூலவள அபிவிருத்தி கல்வி கலாசார அமைச்சின் மூலம் யாழ்ப்பாணத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட அலுவலகத்தின் உத்தியோகத்தர்களால் இம்மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

யாழ் தேசிய இளைஞர் சேவைகள மன்ற உதவி இயக்குநர் ரி சிவதட்சணாமூர்த்தியின் தலைமையில் மாவட்ட இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர்கள் இம் மதிப்பீட்டில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், 450 இளைஞர், யுவதிகள் இவ் ஆய்வுக்குட் படுத்தப்பட்டு தொழிற்திறன் பயிற்சிக்கான விபரக் கொத்து தயாரிக்கப் படுகின்றது

2003 ஆம் நிதியாண்டில் செயற் படுத்தவுள்ள இப் பயிற்சித் திட்டங்களுக்கு அரச, அரச சார்பற்ற பயிற்சி நிலையங்களின் உதவிகள் நாடப்படவுள்ளன.

இவ்வேலைத் திட்டங்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி என்பன தமது அனுசரணையை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

## ஜோசப் எம. பி. நோர்வே செல்வார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் நாளை வியாழக்கிழமை நோர்வே அரசின் விசேட அழைப் பின் பேரில் நோர்வே செல்லவுள்ளார்.

29 ஆம் திகதி வரையான 7 நாட்கள் அங்கு தங்கவுள்ள இவர், நோர்வே அதிபர் மற்றும் அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் ஆகியோரைச் சந்தித்து சமாதான நடவடிக்கைகள் தொடர்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு தொடர்பாக கலந்துரையாடவுள்ளார்.

(உ)

## லயன்ஸ் கழகங்களின் புதிய நிர்வாகிகள்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகத்தின் தலைவராக லயன் எஸ்.சுந்தரலிங்கமும் செயலாளராக லயன் எஸ். செல்வகுமாரும் பொருளாளராக லயன் பி.செந்தில் செல்வமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (உ-77)

●

(தென்மராட்சி)

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தின் புதிய தலைவராக லயன் எஸ். சிவநேசனும், செயலாளராக லயன். எஸ்.அருளையாவும், பொருளாளராக லயன் ஏ ஜயேந்திரனும் தெரிவாகியுள்ளனர். (உ-77)

●

(தென்மராட்சி)

கோப்பாய் லயன்ஸ் கழகத்தின்புதிய தலைவராக லயன். கே இராசதுரையும், செயலாளராக லயன் நீ.வரதராஜாவும், பொருளாளராக லயன் டாக்டர். வீ.தியாகராசாவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (உ-77)

●

(தென்மராட்சி)

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் 306 மாவட்டத்தின் பிராந்தியம் 9ன் தலைவராக லயன். ரீ.சற்குணராஜாவும், பிராந்தியம் 10 ன் தலைவராக லயன். டாக்டர். எம். கதிர்காம நாதனும் மாவட்ட ஆளுநர் லயன் ஒ றீகன் பிஞ்சியினால் அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ் இருவரும் பிராந்தியம் 9,10 இல் இயங்கி வருகின்ற 18 லயன்ஸ் கழகங்களின் செயல்பாடுகளை வழி நடத்திச் செல்வார்கள்.

இவர்களுக்கு உதவியாக வலயத் தலைவர்களாக லயன். டாக்டர். செல்வி. என். கனகரத்தினம், லயன். டாக்டர். கே. இளங்கோ, லயன்.எஸ்.ரவீந்திரா, லயன், டாக்டர் வீ.யோகேஸ்வரன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் பிராந்திய இணைப்பாளராக லயன். டாக்டர்.எஸ்.எஸ். அருளானந்தமும், மாவட் தலைவர்களாக லயன்.டாக்டர் வி. தியாகராஜா லயன் பேராசிரியர்.க. குகபாலன், லயன்.ஏ. ஞானராஜாவும் நியமிக்கப் பட்டுள்ளனர். (உ-77)

## நியாப் திட்டங்களை செயற்படுத்துவது பற்றிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் நியாப் திட்டங்களை செயற்படுத்துவதுதொடர்பானகலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை மு. ப 10 மணிக்கு யாழ். சமநல சேவைத் திணைக்களத்தில் மேலதிக அரசாங்க அதிபர்

(6ம் பக்கம் பார்க்க)

## யாழ். தேசிய கல்வியியல் கல்லூரியில் ஐந்து கையெழுத்துச் சஞ்சிகைகள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியில் கடந்த வெள்ளியன்று ஆசிரியப் பயிலுநர்களால் ஆக்கப்பட்ட ஐந்து கையெழுத்துச் சஞ்சிகைகள் வெளியிட்டு வைக்கப் பட்டன.

ஆரம்பக்கல்வி மன்றத்தின் 'ஆரம்ப அருவி,' தமிழ் மன்றத்தின் 'புலர்வு' அழகியல் மன்றத்தின் 'அழகு' விஞ்ஞான- கணித மன்றத்தின் 'குவியல்' ஆங்கிலமன்றத்தின் 'Jacolled Spriug' ஆங்கில சஞ்சிகைஆகியன இதில் அடங்கும்.

இக்கையெழுத்துச் சஞ்சிகைகளின் ஆய்வுரைகளை கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி தி. கமலநாதன் அதிபர்களான கே. வி. குணசேகரம், மு. விக்னேஸ்வரன் மற்றும் ஆசிரியர் நா. பாலகிருஷ்ணன், ஓய்வு பெற்ற சேவைக்கால ஆலோசகர் சேதுகாவலர் ஆகியோர் நிகழ்த்தினர் (உ-79)

## கிழக்கு மாகாணத்திலுள்ள கடல் பிராந்தியங்களை இணைத்து மீன்பிடிவலயம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் உள்ள மாவட்டங்களின்கடல் பிராந்தியங்களை இணைத்து, மீன்பிடி வலயம் ஒன்றை உருவாக்குவது பற்றி அரசாங்கம் ஆலோசனை நடத்திவருகிறது.

கடற்றொழில் கடல்வள அமைச்சர் மஹிந்த விஜயசேகர திருகோணமலையில் நடைபெற்றுவரும் 'யுகதர்ம' கண்காட்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் உள்ளமட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களின் கடற்பரப்புக்களைஇணைத்துஇப்பிரதேசங்களிலுள்ள கடற்றொழிலாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் நோக்கிலேயே இவ் மீன்பிடி வலயம் அமைக்கப்படவுள்ளதாகவும்அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்திய றோலர்கள் இப் பிரதேச கடற்றொழிலாளர்களின் தொழில் நடவடிக்கைகளுக்கு அண்மைக்காலமாக இடைஞ்சல்களை ஏற்படுத்தி வருவதும் தெரிந்ததே (உ-8)

(இன்று சந்நிதியான் தேர்)

### நிமிர்ந்தவர்க்கு அருள் புரிந்திரு

தோற்ற பகைக்கருள் செய்து
சீற்றந் தணிந்திட தண்மை
யாற்றங் கரையோரம் வந்தமர்ந்தவனே
பற்றினோமுன் தாள் காத்திடுக

ஆலிலையமுது விரும்பி மருதர்
கதிர்காமர்க்கருள் புரிந்து
வேலினை யூன்றி தொண்டைமானாறுறை
வேலவா! தீந்தமிழர் வெந்துயர் நீக்கிடு!

அலையென நிமிர்ந்தவர் தீரத்தால்—இருள்
கலைந்து விடிகிறது தேசத்தின் ஓரம்
மலையமர் குறுஞ்சிக் குமரா—விழி
திறந்தவர்க்கு அருள் புரிந்திடு!

ஆக்கம்:-
நெற் கொழு தாசன்
வல்வெட்டித்துறை

# சமாதான முயற்சிகளுக்கு எதிர்க்கட்சி பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

## றொனி டிமெல் பி. பி. சிக்கு பேட்டி

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகளுக்கு எதிர்க்கட்சி பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென முன்னாள் நிதியமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான றொனி டிமெல் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் பி.பி.சி. செய்திச் சேவைக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் பேட்டியளிக்கையில்,

இரு தசாப்தங்களாக இடம்பெற்று வந்த யுத்தத்தினை முடிவுக்கு கொண்டு வரும் நோக்கில் அரசு முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு தடைகளை ஏற்படுத்துவது உகந்ததல்ல.

இவ்வாறான தொரு முயற்சிக்கு தடைகளை ஏற்படுத்தக் கூடிய செயல்களை மாத்திரமன்றி அவ்வாறானதொரு கருத்தைக்கூட நான் எதிர்க்கிறேன்.

தற்போது நாட்டுக்கு அவசியமானது சமாதானமே அதனை நிலை நாட்டுவதற்கும் சீரழிந்த நிலையிலுள்ள பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்து நாட்டில் புதியதொரு அரசியல் கலாசாரத்தை அறிமுகப்படுத்த முயற்சி செய்யும் எவருக்கும் எனது முழு ஆதரவும் உண்டு என்றார்.

நாட்டின் தற்போதைய அரசியல் அமைப்பு பற்றி விமர்சித்த அவர், அது நாட்டுக்கு பொருத்தமானது அல்ல எனவும், முற்றாக மாற்றியமைக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்

பொதுஜன ஐக்கிய முன்னணி எதிர்க்கட்சியாக நடந்து கொள்ளும் விதம் பற்றி கருத்து தெரிவிக்கையில், அக்கட்சி சார் நடவடிக்கைகளில் தற்போதைய நாட்டின் சூழ் நிலைக்கேற்ப சாதகமான முடிவுகளும் அதே வேளை பாதகமான முடிவுகளும் இருக்கின்றன என்று குறிப்பிட்டார். (உ 8)

### மீன்பிடிப் படகுகள் எடுத்து வருகை

(தென்மராட்சி)

ஏ-9பாதைதிறக்கப்பட்டது முதல் இன்றுவரை குடாநாட்டுக்குள் 250க்கு மேற்பட்ட மீன்பிடிப்படகுகள் மீன்பிடியாளர்களால் கொண்டு வரப்பட்டுள்ளன.

இவ்விதம் கொண்டு வரப்பட்ட மீன்பிடிப்படகுகளுக்கானஆவணங்கள் முறையாக இல்லாமையினால் அவற்றின் உரிமையாளர்கள் பற்றிய தகவல்கள் பூரணமாக தெரிந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரிய வருகின்றது. (உ-77)

## இம்மாதம் 24 இல் கட்டடக்கலைஞர் குழு குடாநாட்டுக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

தென்பகுதியைச் சேர்ந்த கட்டட வடிவமைப்பு கலைஞர்கள் மற்றும் நிபுணர்கள் அடங்கிய 9 பேர்கொண்ட குழுவொன்று எதிர்வரும்24ம் திகதி சனிக்கிழமை யாழ். குடாநாட்டுக்கு விஜயம் செய்யவுள்ளது.

மூன்று நாட்கள்இங்குதங்கியிருக்கும்இக்குழுவினர் யுத்த அனர்த்தங்களினால்ஏற்பட்ட சட்டடங்களின் பாதிப்புக்கள் குறித்து நேரில் கண்டறிவதுடன்,

குடாநாட்டு கட்டட வடிவமைப்புக்கள் குறித்த ஆய்வொன்றையும் மேற்கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, இக்காலப் பகுதியில் செயலகத்தில் யாழ். குடாநாட்டில்உள்ள கட்டடக் கலைஞர்களைச் சந்திக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. (உ-6)

## மாதாந்த கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்ட மாதாந்தக் கலந்துரையாடல், ''இலங்கை இனப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் கடந்த காலமும் நிகழ் காலமும் - ஒரு அரசியல் கண்ணோட்டம் என்ற தலைப்பில் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். பல்கலைக் கழக அரசியல் விரிவுரையாளர் ஏ. ரி. கணேசலிங்கம் நிகழ்வில் தொடக்கவுரையாற்றுவார். (உ)

## இன்னிசை விரிவுரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தன் ஆலயஉற்சவ காலத்தில் நல்லூர் சைவ மகாசபை நடத்தும் இன்னிசை விரிவுரை மஞ்சத் திருவிழாவான நாளையதினம் ஆரம்பமாகி உற்சவகாலங்களில் தினமும் மாலை 5 45 மணிமுதல் நல்லூர் மேற்கு வீதி முத்து விநாயகர் ஆலயத்தில் இடம் பெறவுள்ளது.

பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா'மகாபாரதம்' என்னும் பொருளில்பக்கவாத்தியங்கள் சகிதம் இன்னிசை விரிவுரையை நிகழ்த்துவார். (உ)

## புலிகளின் அரசியல் பிரிவு வீடு வீடாகச் சென்று சமகால அரசியல் பிரசாரம்

(மந்திகை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவினர் வடமராட்சிப் பகுதியிலுள்ள கிராமங்கள் தோறும் சென்று மக்களுடைய குறைகளை கேட்டறிவதுடன், சமகால அரசியல் தொடர்பாக மக்களுடன் கலந்துரையாடியும் வருகின்றனர்.

அரசியல் நடவடிக்கைகளுக்காக குடாநாட்டுக்கு வந்துள்ள புலிகள் இயக்கப் போராளிகள் வடமராட்சிப் பகுதியில் தற்காலிக அலுவலகங்களை அமைத்து பிரதேசங்கள் தோறும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை சித்திரிக்கும் படக் காட்சிகளை காண்பிப்பதுடன், சமகால அரசியல் தொடர்பான கூட்டங்களையும் நடத்தி வருகின்றனர்.

இது ஒரு புறம் இருக்க அரசியல் துறையைச் சேர்ந்த 20 இற்கும் மேற்பட்ட போராளிகள் வீடுவீடாக சென்று மக்களுடைய குறைகளை கேட்டறிந்து வருகின்றனர்.

பொதுமக்களால் முன்வைக்கப்படும் குறைகளைசம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நிறைவேற்றிவருவதாக இப் பணியில் ஈடுபட்டுள்ள போராளி ஒருவர் தெரிவித்தார். (உ- 3)

## ஸ்ரீகாயத்ரி ஹோமம்

(யாழ்ப்பாணம்)

மீசாலை ஸ்ரீகாயத்திரி காமகோடி பீடத்தில் நாட்டில் சமாதானமும், சாந்தியும், சுபீட்சமும் வேண்டி நாளை வியாழக்கிழமை சுவாமி ஸ்ரீ ராஜ்குமார் ஸ்ரீ காயத்ரி காமகோடி பீடாதிபதி தலைமையில் காயத்ரி ஹோமம் நடைபெறவுள்ளது. (உ)

## அமைச்சர் எஸ்.பிக்கு ஜனாதிபதியின் கடிதத்தில் நம்பிக்கையில்லை

(கொழும்பு)

அரசாங்கத்தை பாதுகாக்கும் வகையிலான அரசியல் சீர் திருத்த சட்ட மூலம்பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்ற சமுர்த்தி விவசாய மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சர் எஸ். பி.திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; பாராளுமன்றத்தைதான் கலைக்கவில்லை என்று சபாநாயகருக்கு ஜனாதிபதி சந்திரிகா அனுப்பிய கடிதத்தில் தாம் நம்பிக்கை கொள்ளவில்லை என்றும் குறிப்பிட்டார்.

அமைச்சர் ஜோன் அமரதுங்கா மீது கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயேஇவ்வாறு தெரிவித்துள்ளார். (உ-10)

## ஜி. ரி. சற். உதவி

(கோப்பாய்)

கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில் உள்ள 6 பாடசாலைகளுக்கு புதிய மலசல கூட நிர்மாணிப்புக்கென ஜி.ரி.சற் நிறுவனத்தால் உதவு பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. (உ-79)

## பரு. ஆஸ்பத்திரி பிரேத அறையை புனரமைக்க அமெ. வாசி வேண்டிய நிதியுதவி

(மந்திகை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் உள்ள பிரேத அறைவிரைவில் புனரமைக்கப்படவுளளது.

மேற்படிவைத்தியசாலையை அண்மையில் பார்வையிடச் சென்ற அமெரிக்காவில் தற்போது வசிக்கும் கரவெட்டியைச் சேர்ந்த ஒருவர், இப் புனரமைப்புக்கு வேண்டிய நிதியை வழங்க முன்வந்துள்ளார்.

இதேவேளை, ஜன்னல்கள் சேதமடைந்து பாதுகாப்பற்ற நிலையில் உள்ள இப்பிரேத அறையை புனரமைப்புச்செய்யுமாறு வடமராட்சி திடீர் மரண விசாரணை அதிகாரி இ. கிருபாகர சூரியன் வைத்தியசாலை நிர்வாகத்திடம் ஏற்கனவே கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-23)

## மலையகத்திலும் தொழிற் பேட்டைகள்

### அமைச்சர் சந்திரசேகரன் யோசனை

(திருகோணமலை)

மலையகத்தில் தொழிற் பேட்டைகள் அமைக்கப்பட வேண்டுமென்று பெருந்தோட்ட உட் கட்டமைப்பு அமைச்சர்பெ. சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் நடை பெறுகின்ற வர்த்தக கண்காட்சியில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே இவ்வாறு தெரிவித்த அவர்,

மலையக மக்களுக்கு சொந்தக் காணிகளோ அல்லது சுய தொழில் வாய்ப்புக்களோ இல்லாத நிலையில் உள்ளனர்;

கைத்தொழிற் பேட்டைகளை இங்கு ஆரம்பிப்பதன் மூலம் இளைஞர், யுவதிகளுக்கான வேலை வாய்ப்பினை பெற்று கொடுக்க முடியும் என்று குறிப்பிட்டார். (உ-10)

## பூந்தோட்டத்தில் குடிநீருக்குத் தட்டுப்பாடு

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டப் பகுதியில், தற்போதைய கடும் வரட்சியினால் குடிநீருக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இப் பகுதியிலுள்ள குளத்து நீர் வற்றி விட்டமையால் குடியிருப்புகளிலுள்ள கிணறுகளும் வற்றிய நிலையில் காணப்படுகின்றன. (உ)

## லயன் 306 பி மாவட்டத்தின் கழக நிர்வாகிகளுக்கு திட்டமிடல் கூட்டம்

(தென்மராட்சி)

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் 306 பி மாவட்டத்தின் பிராந்தியம் 9க்கான கழக நிர்வாகிகளுக்கான திட்டமிடல் கூட்டமும் பாடசாலையும் அண்மையில் யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் பிராந்தியத் தலைவர் லயன். ரீ. சற்குணராஜா தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் மானிப்பாய், கோப்பாய், இணுவில், யாழ்ப்பாணம், சுன்னாகம், உரும்பிராய், வடமராட்சி, நல்லூர் ஆகிய 8 லயன்ஸ் கழகங்களின் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள் மற்றும் முதலாவது உபதலைவர்களும் சமுகமளித்திருந்தனர்.

2002/2003 லயன்ஸ் வருடத்துக்கான கழகங்களின் செயற்பாடுகள் வேலைத் திட்டங்கள் பற்றி இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

பிராந்திய இணைப்பாளர் லயன் டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம் நல்ல வளங்களுக்கான வலுவான திட்டமிடல் எனும் விடயம் பற்றி இங்கு கருத்துரை வழங்கினார்.

மாவட்ட இணைப்பாளர்களான லயன் சே.வி. முத்துக்குமாரசாமி, லயன் எஸ்.எஸ். தங்கராசா ஆகியோரும் இதில் பங்கு பற்றியிருந்தனர். (உ-77)

## கைதடி விவசாயிகள் விதைப்புக்கு தயார்

(கோப்பாய்)

கைதடிப் பகுதி விவசாயிகள் கால போக வயல் விதைப்புக்கானஆரம்பவேலைகளைத் தற்போது தொடங்கியுள்ளனர்.

கடந்த காலப்போர்அனர்த்தங்களினால் வயல்கள் செய்கைபண்ணப்படாதிருந்த காரணத்தால் சம்பு போன்ற புல் வகைகளும், பற்றைகளும் மண்டிக் காணப்படுவதால் இவற்றைத் துப்புரவு செய்து வருகின்றனர். (உ-79)

## பொதுநலவாய பாராளுமன்ற ஐ. இராச்சியக் கிளை உறுப்பினர்கள்யாழ்.வருவர்

(யாழ்ப்பாணம்)

பொதுநல வாய பாராளுமன்ற சங்கத்தின் ஐக்கிய இராச்சியக் கிளை உறுப்பினர்கள் குழு நாளை வியாழக்கிழமை யாழ்ப்பாணம்வரவுள்ளது.

13 பேரடங்கியஇக்குழுவில் ஹெபின் வாறோன், டேவிற் வொரோ, பரனேஸ், பிளேத்தின், ஜேமஸ் கிறே, ஜோன் ஹப்பல, கிளையர் வோட், மற்றும் ஐக்கிய இராச்சியக் கிளை பாராளுமன்றச் செயலாளர் ஹொன கேவூர், உதவிச் செயலாளர் நாயகம் தம்மிக்க தஷநாயக்காஆகியோர் அடங்குகின்றனர்.

இவர்கள் நாளையதினம் யாழ். செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலர்களுடனான சந்திப்பொன்றை நடத்தி யாழ். குடாநாட்டு மக்களின் இன்றைய நிலை தொடர்பாக ஆராயவுள்ளனர். (உ-6)

## அருளாசி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

அமெரிக்காவில் இருந்து வருகை தந்துள்ள சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் சீடர் தொண்டநாதன் சுவாமிகளால் பக்தர்களுக்குஅருளாசி வழங்கப்படும் நிகழ்வு மீசாலை ஸ்ரீகாயத்ரி காமகோடி பீடத்தில் பீடாதிபதி சுவாமி ஸ்ரீராஜ்குமார் தலைமையில் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. (உ)

# இன்று ஒரு தகவல்

## பொய் சொன்னால் என்ன?

'எனக்குப் பொய்யே பேசத் தெரியாது சார்' என்று என்னிடம் வந்து சொன்னார் ஒருவர், 'அவரின் வாழ்க்கையில் அவர் சொல்கிற மிகப் பெரிய பொய் அதுதான்? என்கின்ற உண்மை எனக்குத் தெரியும், பொய் பேசுவதை ஒரு கலையாகவே செய்து கொண்டு வருபவர் அவர். பொய்யில் எத்தனைவகை இருக்கிறது? அது எந்தெந்த இடத்தில் எப்படியெல்லாம் உபயோகிக்கப்படுகிறது? என்பதைப்பற்றியெல்லாம் அவர் ஏற்கனவே என்னிடம் விலாவாரியாக எடுத்துச் சொல்லியிருக்கிறார். அதில் அவர் நிபுணர்; அதனால் அவர் சொல்லுகின்ற விபரத்தை நாமும் தெரிந்து வைத்திருப்பது நல்லது

முகஸ்துதி என்று சொல்கிறோமல்லவா, அது வகையான பொய், ஒரு பெரிய மனிதனிடம் போய் காரியம் சாதிக்க வேண்டியிருக்கிறது. என்ன செய்கிறோம்? உன்னைப் போல உண்டா? ஆகா... ஓகோ... என்று புகழ ஆரம்பித்து விடுகிறோம். கர்ணனுடைய மறு அவதாரம் நீங்கள் தான் என்கிறோம். உடனே அவரும் கையில் கிடைத்ததை அள்ளிக்கொடுக்கிறார். முகஸ்துதியிலுள்ள ஒரு (சைக்காலஜி) மனோதத்துவம் என்ன தெரியுமா? செய்கிறது முகஸ்துதி தான்என்பது கேட்பிறவர்களுக்குத் தெரியும்... இருந்தாலும் மனதுக்கு அதைக்கேட்கிற பொழுது மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. இது மனித இனத்தின் பலவீனம்.

அடுத்தவர்களை புகழ்வதற்கு பெயர் முகஸ்துதி. நம்மையே புகழ்ந்து கொள்வதற்குப் பெயர்தற்புகழ்ச்சி. அதுவும் ஒருவகையாக பொய் தான். எப்படி தெரியுமா? நம்மிடமுள்ள குறைகளை மறைத்து, நிறைகளை மிகைப் படுத்திப் பேசுகிறோம், இதனால் மற்றவர்களுக்கு நம்முடைய உண்மையான சொருபம் தெரிவதில்லை.... மறைத்து விடுகிறோம். இது பொய்தானே. சாக்குப் போக்குச் சொல்கிறார்களே அதுவும் பொய்யில் ஒருரகம், பல சமயங்களில் நமது கடமையை நாம் ஒழுங்காகச் செய்வதில்லை. சொடுத்த வாக்குறுதியை மீறிவிடுகிறோம், அந்தச் சமயத்தில் நமது தவறை மறைப்பதற்காகப் பொய் சொல்கிறோம். அந்த இடத்தில் அதற்குப் பெயர் சாக்குப் போக்கு 'வீண் பேச்சு' என்று சொல்கிறோ மல்லவா அதுவும் பொய்யிலே ஒரு வகை தான் ஏதோ பொழுது போக வேண்டும் என்பதற்காக இல்லாததையும் பொல்லாததையும் பேசிக் கொண்டிருக்கிறோம் பாருங்கள் அதில் பொய்க் கலப்பு அதிகமாக இருக்கிறது அவதூறு என்று சொல்கிறோ மல்லவா அதுவும் ஒரு வகையான பொய்தானாம். அடுத்தவர்கள் புகழைக் கொடுக்கிற மாதிரி நிம்மதியைக் குறைக்கிற மாதிரி நாம் பேசுகிறோமே அதற்குப் பெயர்தான் அவதூறு. அவன் என்ன சார் பெரிதாகச் சாதித்து விட்டான். நான் சாதிக்காத சாதனையா? என்று பேசுகிறவர்கள் எத்தனை பேர்?

பொய்யிலேயே மிகவும் உறுதியான ஒரு வகை இருக்கிறது. அது தான் பொய்ச் சாட்சி இது மிகவும் மோசம் அடுத்தவர்கள் வாழ்க்கையை மிகவும் மோசமாகப் பாதிக்கக் கூடியது இது. ஒரு நீதி மன்றத்தில் போய் நின்று கொண்டுநடந்ததைநடக்கவில்லையென்றும் நடக்காததை நடந்ததென்றும் சொல்வது எவ்வளவு பெரிய மோசம்? யாருக்கும் கெடுதல் இல்லாமல் ஒரு நல்லது நடக்கும் என்றால் அதற்காகப் பொய் சொல்லலாம்' என்கிறார் திருவள்ளுவர். அந்தப் பொய் உண்மைக்குச் சமம்.

ஒரு வேதாந்தியைப் பார்த்து இந்த உலகத்திலேயே பெரிய பொய் எது என்று கேட்டார் ஒருவர். பொய்யான இந்த உடம்புக்கு 'மெய்' என்று பெயர் வைத்திருக்கிறோமே... அது எவ்வளவு பெரிய பொய் என்றார் அவர். 'பொய் சொல்லுகிற வாய்க்குப் போஜனம் கிடைக்காது' என்று ஒரு பழமொழி. இந்தப் பழமொழியில் எனக்கு நம்பிக்கையில்லை என்றார் ஒரு குடும்பத் தலைவர். பொய் சொல்கிற வாய்க்குத் தான் சார் போஜனம் கிடைக்கும். என் மனைவியைப் பார்த்து நீ மிகவும் அழகாக இருக்கிறாய் என்று தினமும் சொல்கிறேன் அதனாலே தான் சார் எனக்குத் தினமும் போஜனம் கிடைத்துக் கொண்டிருக்கிறது என்று அதற்கு ஒரு விளக்கமும் கொடுத்தார். இவரை என்ன சார் பண்ணுவது?

தென்கச்சிகோ. சுவாமிநாதன்

# கிழக்கில் தொழிலகங்களை நிறுவ வெளிநாட்டு நிறுவனங்கள் ஆர்வம்

(மட்டக்களப்பு)

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் நாட்டில் சுமுகமான சூழ்நிலை உருவாகியுள்ளதையடுத்து கிழக்குமாகாணத்தில் புதிய தொழிற்சாலைகளை அமைப்பதற்கு வெளிநாட்டு நிறுவனங்கள் முன்வந்துள்ளதாக கைத்தொழில் அமைச்சர் ரோகித போகல்லாகம தெரிவித்துள்ளார்.

'இந்தியா, யப்பான், பாகிஸ்தான் ஆகியநாடுகள் இங்கு தொழிற்சாலைகளை நிறுவ ஆர்வம் காட்டிவருவதாகவும் திருகோணமலை பகுதிகளில் நிலக்கரி தொழிற்சாலை ஒன்றினை அமைப்பதற்கு இந்தியா விருப்பம் தெரிவித்திருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை திருகோணமலையில் இந்தியா பெற்றோலிய நிறுவனம்ஏற்கனவேமுதலீடு செய்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-8)

# தெய்வீக இசையரங்கில் இன்று

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்றம் நடத்தும் நல்லூர் உற்சவ காலத்தை ஒட்டிய தெய்வீக இசையரங்கில் ஒன்பதாம் நாளான இன்று வி.கே.கானமூர்த்தி குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரி இடம்பெறவுள்ளது. (உ-3)

# தெய்வீக நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ காலத்தில் வடபிரதேச இந்துப்பேரவை, 63 நாயன்மார் குருபூசை மடத்தில் நடத்தி வரும் தெய்வீக நிகழ்ச்சிகளில் இன்று 'பெரும் பெயர் முருகன்' என்ற பொருளில் சிவத்திரு மாவை செ. நவரத்தினம் சொற்பொழிவாற்றவுள்ளார் (உ-3)

# உசனில் வீதி திறப்பு

(மந்திகை)

கடந்த இரண்டு வருடங்களாக பொதுமக்களின் போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டிருந்த உசன் தெற்குப் பகுதிக்கான வீதி அண்மையில் படையினரால் திறந்து விடப்பட்டுள்ளது. (த-23)

# வெடிவிபத்தில் சிப்பாய் காயம

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கெருடாவில் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் கண்ணிவெடி வெடித்ததில் படுகாயமடைந்துள்ளளார்.

நேற்றுமுன்தினம் காலை 7 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவத்தினால் இடது கால்துண்டிக்கப்பட்ட நிலையில் பிரஸ்தாப சிப்பாய் பலாலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

# பொலிஸார் போல் வேடமிட்டு பண மோசடி புரிந்த போலி ஆசாமிகள் கைது

(கொழும்பு)

பொலிஸ் அதிகாரிகளை போல வேடமிட்டு பண மோசடிகளில் ஈடுபட்டு வந்த குழுவொன்றை அவிசாவளை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

அவிசாவளைப் பகுதியிலுள்ள வீடியோப்பட விற்பனை நிலையமொன்றில் பொலிஸாரைப் போல் சோதனையிட்டு பணமோசடி செய்யமுற்பட்டபோது இவர்கள் பொலிஸாரிடம் வகையாக மாட்டிக்கொண்டனர்.

இக்குழுவிற்கு சொந்தமான வீடொன்றில் இருந்து பொலிஸ் திணைக்கள ஆவணங்கள், பொலிஸ் அடையாள அட்டைகள், கணனிகள் என்பவற்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

பொலிஸார் நடத்திய விசாரணைகளின் அடிப்படையில் இக்குழுவினர்60வீடியோபட விற்பனை நிலையங்களை ஏமாற்றிப்பணம் பெற்றுள்ளமை தெரிய வந்துள்ளது. (உ-8)

# பொதுப் பரீட்சைகளின் பெறுபேறுகள் அழிவு

(தென்மராட்சி)

தென்மராட்சியில் இடம் பெற்ற யுத்தத்தின் காரணமாக அப்பகுதிப் பாடசாலைகள் பலவற்றில் இருந்த பொதுப் பரீட்சைகளின் பெறுபேறுகள் அழிந்து போயுள்ளன.

இதனால் பொதுப் பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பெறுபேற்றுச் சான்றிதழ்களை வழங்க முடியாத நிலை குறிப்பிட்ட சிலபாடசாலை அதிபர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இப் பெறுபேற்றுச் சான்றிதழ்கள் இல்லாமையினால் குறித்த மாணவர்கள் தமது கல்வியைத் தொடர முடியாத நிலையும் காணப்படுகின்றது.

அதேசமயம், இதுவிடயம் குறித்து கொழும்பிலுள்ள கல்வித் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெற்று வழங்கும்படி அம்மாணவர்களின் பெற்றோர் பாடசாலை அதிபர்களை வற்புறுத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (உ-77)

# அமெ. பாதுகாப்புக் குழு சாவகச்சேரிக்கு விஜயம்

(கொழும்பு)

அமெரிக்கத் தூதரகத்தின் பாதுகாப்புஇணைப்பாளர் அல்பேட் கமியாஸ்உட்பட மூன்று அதிகாரிகள் கொண்ட குழுவினர் நேற்றுமுன்தினம் சாவகச்சேரிப்பகுதிக்குச் சென்றனர்.

இரண்டு விசேட ஹெலிகெப்டர்கள் மூலம் காலை 7.00 மணிக்கு சாவகச்சேரி இராணுவ முகாமில்இவர்கள் வந்திறங்கி, தென்மராட்சிப் பகுதியிலுள்ள இராணுவத்தினரின் முன்னரங்கப்பகுதிகளுக்குச் சென்று பாதுகாப்பு நிலைவரங்களைப் பார்வையிட்டனர்;

அமெரிக்கப்பிரதி இராஜாங்க செயலாளர் ரிச்சாட் கமிடேஜ்ஜின் யாழ்ப்பாண விஜயத்தை முன்னிட்டேஇவ்வதிகாரிகள் யாழ். குடாநாட்டுக்கு விஜயம்செய்ததாக படைத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இவ்வதிகாரிகளின்விஜயத்தை முன்னிட்டு சாவகச்சேரி வீதிகளில்பொது மக்களின் நடமாட்டம் அன்றைய தினம் முற்பகல் 10.00 மணிவரை படையினரால் தடை செய்யப்பட்டிருந்தது. (இ-5)

# கடல்வளபாட ஆசிரியர்களுக்கான சந்திப்பு

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகியமாவட்டங்களில் கடல் வளப்பாட ஆசிரியர்களாகநியமனம் பெற்றோர்களுக்கான சந்திப்பு எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9.30 ற்கு யாழ். பல்கலைக் கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் அனைவரையும் தேசியக் கல்வி நிறுவனத்தால் வழங்கப்பட்ட பாட விதானத்துடன் வருகைதருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இச் சந்திப்பில் யாழ் பல்கலைக் கழகத்தில் மீன்பிடியியல் டிப்ளோமா கற்கைநெறியில் சித்தியடைந்த முதலாம், இரண்டாம்அணியைச்சேர்ந்தவர்களில் நியமனம் கிடைக்கப்பெறாதவர்களையும் வருகை தரும்படி அழைக்கப்பட்டுள்ளது. (உ)

# 'தேசோதய' எனும் பெயரில் அரசியல் நீரோட்டத்தில் சர்வோதயம் இணையும்

(தென்மராட்சி)

சர்வோதய இயக்கம் 'தேசோதய' எனும் பெயரில் நாட்டின்அரசியல் நீரோட்டத்தில் பிரவேசிக்கவுள்ளது.

இது பற்றி சர்வோதய இயக்கத் தலைவர் கலாநிதி ஏ.ரீ. ஆரியரத்தின கருத்துத் தெரிவிக்கையில்,

சர்வோதய இயக்கத்தின்இம் முடிவினை அறிவிக்கும் பொருட்டு அண்மையில் காலி மாவட்டத்தில் கூட்டமொன்று நடத்தப்பட்டு இத்திட்டம்பற்றிய அறிவித்தல் வெளியிடப்பட்டதெனவும் இத்திட்டம் கட்டம்கட்டமாகஐந்துஆண்டு காலத்தில் நடைமுறைப் படுத்தப்படும் எனவும் குறிப்பிட்டார்.

அத்துடன், நாட்டில் இன முரண்பாடுகளைத் தீர்க்கக் கூடிய வகையில் ஒருபுதிய அரசியல் தத்துவத்தைஅமுல்செய்வதுடன், சுயகிராம நிர்வாகத் திட்டத்தினை கிராமிய, நகர மட்டத்தில் அறிமுகப்படுத்துவதும் இதன் நோக்கங்களில் ஒன்றாகும்.

இது பற்றிய விளக்கங்களை மக்களுக்கு எடுத்துக் கூறும் பொருட்டு கண்டி, கொழும்பு, குருநாகல், புத்தளம், அனுராதபுரம், மாத்தளை, பதுளை மற்றும் மொனறாகல மாவட்டங்களில் இதுவரை 41 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன எனவும் தெரிவித்துள்ளார்:

முரண்பாட்டு அரசியலுக்கு அப்பால் ஆக்கபூர்வமான சிந்தனைகள், செயல்பாடுகளுக்கு இவ் அரசியல் அமைப்பு முக்கியத்துவம் கொடுத்துச் செயல்படவுள்ளதுடன்,

இவ் அமைப்பின் கொடியில் மஞ்சள் சிவப்பு நிறங்கள் அடங்கியிருக்கும் எனவும்குறிப்பிட்டார். (உ-77)

# வடமராட்சி கிழக்கில் 1500 வீடுகள் சேதம்

(தென்மராட்சி)

கடந்த காலங்களில் வடமராட்சி கிழக்குபிரதேசத்தில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்கள் காரணமாக ஆயிரத்து 500 க்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளமை மதிப்பீடுகள் மூலம் தெரியவந்துள்ளது:

சேதமடைந்த இவ்வீடுகளைப் புனரமைப்புச் செய்வதற்கு 135 மில்லியன் ரூபா தேவை என தேசிய வீடமைப்பு அதிகாரசபை மதிப்பிட்டுள்ளது. (உ-77)

### சிறு விளம்பரம்

**போட்டி வினாத்தாள்**

உ. த ப. இயக்க பொது அறிவுப் போட்டி 2002 வினாத்தாள் எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம். ரூபா 20/- செ. பரமநாதன் ''பரமநாதன் இல்லம்'' மானிப்பாய் வீதி, தாவடி கொக்குவில்.

(5838)

## சிறு கமக்காரர்களுக்கு விசேட விவசாய வசதி

(துன்னாலை)

நெற் செய்கை, உபஉணவு மற்றும் மரக்கறிச் செய்கையிலீடுபட்டுள்ள சிறுகமக்காரர்களுக்கு உரவகைகளையும் விசேட விவசாய வசதிகளையும் பெற்றுக் கொடுக்கும் நோக்கில், கரவெட்டி மத்தி விவசாய சம்மேளனத்தினால் விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் கால் ஏக்கரில இருந்து ஒரு ஏக்கர் நிலம் உடையவர்களுக்கு 1000 ரூபாவும், ஒரு ஏக்கரிலிருந்து 2 ஏக்கர் வரை நிலம் உடையவர்களுக்கு ஆயிரத்து 500 ரூபாவும் 2 ஏக்கரிலிருந்து 3 ஏக்கர் வரை நிலமுள்ளவர்களுக்கு 2 ஆயிரம் ரூபா பெறுமதியுடைய முத்திரைகள் வழங்கப்பட வுள்ளன.

(உ 41)

# மாறி வருகின்ற உலகத்திற்கு ஏற்றவாறான புதிய சிந்தனைகள் எம்மிடையே இல்லை

யாழ் பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் நேற்று விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் ஆ. குமாரவடிவேல் தலைமையில் இடம்பெற்ற கடலோர வலய முகாமைத்துவத் திட்டம் தயாரிப்பது பற்றிய பிராந்திய ஆய்வுப் பட்டறையில், யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை ஆற்றிய ஆரம்ப உரை இங்கு தொகுத்துத்தரப் படுகிறது.

இன்று உலகத்தில் மாற்றங்கள் மிகவேகமாக இடம்பெற்று வருகின்றன ஆனால் நாமோ இன்னமும் பழமைவாத சிந்தனையிலும் எண்ணத்திலுமே மூழ்கிப் போயிருக்கின்றோம். மாறிவருகின்ற உலகத்துக்கு ஏற்ப புதியசிந்தனைகளையும் திட்டமிடல்களையும் நாம் ஏற்படுத்த வேண்டும்.

தொழில் நுட்பவியல்இன்று மாபெரும் முன்னேற்றம்கண்டு வருகின்றது. நாம் எங்களது திட்டமிடலை 10, 15 வருடங்களுக்கு முன்நோக்கியதாகச் செய்தல்வேண்டும். எமதுமுன்னோர்கள் சொன்னார்கள் என்பதற்காக நாம் இன்றுகருமங்களை ஆற்றக்கூடாது; அவர்கள் வாழ்ந்தகாலம்வேறு நாம் வாழ்கின்ற காலம், சூழ்நிலை வேறானது.

### விவசாயிகளுக்கு நட்டம்

யாழ்ப்பாணத்தில் நாம் ஒரு மணி கோதுமையைக் கூட விளைவிக்கவில்லை. ஆனால் காலை பாண் சாப்பிடுவதையே பழக்கமாகக் கொண்டுள்ளோம். நாம் விவசாயத்தில் பெரியஅளவில் முன்னேறவில்லை. விவசாயம் செய்வதால் எமது விவசாயிகள் நட்டமடைகின்றனர். விவசாயம் செய்யாவிட்டால் அல்லது நெல் விளைவிக்காதுவிட்டால் எமது விவசாயிகள் பணத்தை மீதப்படுத்துவார்கள் என்றநிலைப்பாடு உள்ளது.



நாம் எமது உணவுப்பழக்கத்தில் மாற்றத்தை இன்னமும் ஏற்படுத்தவில்லை. எமது பிரதேசத்தில் உணவு உற்பத்தியை புதிய கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும்.

மேலும் நாம் எப்படியான முறையில் என்னென்ன திட்டங்களைத் தீட்டினாலும்கூட அவற்றினை அமுல் செய்வதற்கு கொழும்பிலும் சரி யாழ்ப்பாணத்திலும் சரி அமைப்புகள் இல்லாமல் இருப்பது துர் அதிஷ்டமே அவர்கள் பணம் இல்லை ஆளணியில்லை எனக் கூறிவருகின்றனர்.

### நாம் மாற வேண்டும்

மேலும், நாம் இன்றைய உலக நடப்புக்கு ஏற்ப எம்மை மாற்றிச் செயற்பட வேண்டும். எமது நாடு ஐக்கியநாடுகள் சபையின்பல பிரகடனங்களில் கையொப்பங்கள் இட்டுள்ளது எனவே, ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கங்களுடன் எமது சிந்தனைகள் ஒன்றிணைந்து இருப்பதாகப் பார்த்துக்கொள்ளவேண்டும்.

(உ-77)

# ரஷ்ய ராட்சத இராணுவக் ஹெலி மீது செச்சினிய கிளர்ச்சியாளர் ஏவுகணைத் தாக்குதல்

## 85 இற்கும் மேற்பட்ட படையினர் பலியாகினர்

(மொஸ்கோ)

**ரஷ்யாவுக்குச் சொந்தமான இராணுவக் ஹெலி ஹொப்டர ஒன்று நேற்று முன்தினம் செச்சினியாவில் வீழ்ந்து நொருங்கியதில் அதில் பயணம் செய்த 85 இற்கும் அதிகமான படையினர் உயிரிழந்துள்ளனர்**

எம்.ஐ.26 ரகத்தைசேர்ந்த இந்த ஹெலி ஹெப்டர் செச்சினியாவிலுள்ள ரஷ்யவின் பிரதான இராணுவத் தளமான கன்ஹராவுக்கு அருகே வீழ்ந்து நொருங்கியுள்ளது.

ஹெலி ஹொப்டர் சென்று கொண்டிருந்த வேளை இயந்திரத்தில் திடீரென பற்றிய தீயினால் அதனை விமானி அவசரமாக தரையிறக்க முற்பட்டபோதே இவ் விபத்து ஏற்பட்டது என இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

செச்சினிய கிளர்ச்சியாளர்களின் உத்தியோக பூர்வ இணைய தளம் வெளியிட்ட செய்தியில் தம்மால் ஏவப்பட்ட ஏவுகணையே மேற்படி ஹெலியைத் தாக்கியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கன்ஹராவில் இக் ஹெலி ஹெப்டர் வீழ்ந்த சுற்றுப்புறச் சூழலில் நிலக் கண்ணி வெடிகள் அதிகமாக புதைக்கப்பட்டிருந்த போதும், 32 படையினரை உயிருடன் மீட்டுள்ளதாகவும் ரஷ்யத் தரப்புச் செய்திகள் தெரிவித்துள்ளன.

(உ-8)

## ஈராக் மீதான தாக்குதல் சாத்தியத்தைக் குறைக்குக

### அமெரிக்காவுக்கு சவுதி நிர்ப்பந்தம்

(பக்தாத்)

ஈராக் மீது தாக்குதல் நடத்தும் சாத்தியத்தைக் குறைக்கவும் பிராந்தியத்தில் பதற்ற நிலையினை தடுக்கவும் இராஜதந்திரம் மற்றும் பேச்சுவார்த்தை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று அமெரிக்காவை அதன் நட்பு நாடான சவுதிஅரேபியா கேட்டுள்ளது.

ஈராக் மீதான இன்னொரு தாக்குதலை தாம் நிராகரிப்பதாகவும் அவ்வாறான தாக்குதல் நடைபெற்றால் அச்செயலுக்கு தம்முடைய மண்ணை பயன்படுத்த போவதில்லையென்று சவுதி அரேபியா தெரிவித்துள்ளது.

அமெரிக்காவுடனான நட்புறவினை சவுதிஅரேபியா மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று அல்றிடா பத்திரிகையில் செய்தி வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

# உலக தரிசனம்

## விமானக் குண்டு வெடிப்புவிசாரணை குண்டு துளைக்காத நீதிமன்றத்தில்

(டொரன்டோ)

1985 ஆம் ஆண்டு வன்கூவரில் இருந்து புதுடில்லிக்குச் சென்று கொண்டிருந்த எயார் இந்தியா விமானத்தில் இடம்பெற்றகுண்டு வெடிப்பு தொடர்பான விசாரணைகளுக்காக 45 இலட்சம் டொலர் செலவில் குண்டு துழைக்காத கணனி மயப்படுத்தப்படுத்தப்பட்ட நீதிமன்றம் ஒன்று கனடாவில் அமைக்கப்பட்டுள்ளது.

அமிர்தசரஸில் உள்ள பொற்கோவிலில் இந்திய இராணுவத்தினரால் ஆயிரம் சீக்கியர்கள் கொல்லப்பட்டதற்காகவே எயர் இந்திய விமானத்தில் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இச் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படும் 3 சீக்கியர்கள் மீதான விசாரணை எதிர் வரும் மார்ச் மாதம் இக் குண்டு துளைக்காத நீதிமன்றில் நடைபெறவுள்ளது.

மேற்படி குண்டு வெடிப்பில் 324 பேர் பலியாகியுள்ளனர். இவர்களில் அநேகமானவர் கனடாப் பிரஜைகளாவர் சந்தேக நபர்களை கண்டுபிடிப்பதற்காக 1 கோடி 90 இலட்சம் டொலர் செலவாகியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(உ-3)

## ஈராக்-ரஷ்யா இடையே பொருளாதார உடன்பாடு

(மொஸ்கோ)

ஈராக்கும், ரஷ்யாவும் 4 ஆயிரம் கோடி டொலர்பெறுமதி வாய்ந்த 5 வருடகால பொருளாதாரஉடன்படிக்கையில் கைச்சாத்திடவுள்ளன.

ஈராக்குடன் செய்துகொள்ளும் எந்தவொரு உடன்படிக்கையும் ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களுக்கு அமைவாக இருக்கவேண்டும் என வாஷிங்டன் மொஸ்கோவுக்கு அறிவித்துள்ளது.

ஈராக் மீதான ஐக்கிய நாடுகள் சபையின் தடைகளுக்கு அமைவாகவே இந்த உடன்படிக்கை அமுல்செய்யப்படுமென ரஷ்யாவுக்கான ஈராக் தூதுவர் அப்பாஸ் கலாஃந் தெரிவித்துள்ளார். (உ)

## கல்லால் எறிந்து கொல்லத் தீர்ப்பு மேன்முறையீட்டை நீதிமன்றம் நிராகரிப்பு

(லாகூஸ்)

கல்லால் எறிந்து கொல்வது தொடர்பான தீர்ப்பை எதிர்த்து நைஜீரிய இஸ்லாமியநீதிமன்றில்பெண்ணொருவர்செய்தமேன்முறையீட்டை சம்பந்தப்பட்ட நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

திருமணத்திற்குப் புறம்பாக கணவரல்லாத ஒருவருடன் தொடர்பு கொண்டு குழந்தை பெற்றுக் கொண்டார் என்ற குற்றச்சாட்டு நிருபிக்கப்பட்ட நிலையில் மேற்படி பெண்ணை கல்லால் எறிந்து கொல்லுமாறு நீதிமன்றம் உத்தர விட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நைஜீரியாவில் இவ்வாறான கல்லால் எறிந்து கொல்லும் தீர்ப்புக்கள் பல வழங்கப்பட்டுள்ள போதிலும் நடைமுறைக்கு இது வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(உ-10)

## இந்திய துணை ஜனாதிபதி பதவியேற்பு

(புதுடில்லி)

இந்தியாவின் 12 வது துணை ஜனாதிபதியாக பைரன்சிங் சேகாவத் நேற்று முன்தினம் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். இவருக்கு குடியரசுத் தலைவர் எ.பி.ஜே அப்துல் கலாம் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். இந்நிகழ்வில் இந்தியப் பிரதமர் வாஜ்பாய், துணைப் பிரதமர் எல்.கே. அத்வானி உட்பட பல தலைவர்கள் கலந்து கொண்டனர்.

(இ-5)

செயற்படு

து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் குடா நாட்டில் உள்ளபிரதேச செயலர்கள், நீர்ப்பாசனத் திணைக்கள உத்தியோகத்தர்கள், கமநல சேவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள், சேவாலங்கா நிறுவனப் பணியாளர்கள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-6,

நல்லினத்தி னூங்குந் துணை
யில்லை தீயினத்தின்
அல்லற் படுப்ப தூஉம் இல்

குறள்

# வலம்புரி

## வெண்ணெய் திரளும்போது

ஜனாதிபதியின் அதிகாரத்தைக்குறைக்கும் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அதற்குப் போதிய ஆதரவு கிடைக்காவிடில் பாராளுமன்றத்தைக் கலைக்கும் தீர்மானம் எடுக்கப்படுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும அவரதுமந்திரிகளும் தீர்மானித்துள்ளனர். இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வுகாண்பதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அரசின் இவ்வறிவித்தல் சமாதானத்தை ஸ்தம்பிக்கச்செய்துவிடும்.

பாராளுமன்றம் கலைக்கப்படமாட்டாதென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காசபாநாயகருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ள போதிலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் அவரதுஅமைச்சர்களும் பாராளுமன்றைக் கலைக்கும் தீர்மானத்தை எடுக்க முனைவதுசமாதானத்திலிருந்து அரசு விலகிச்செல்வதையும், இச்சமாதானச்சூழ்நிலையை வைத்து அரசுதனது பலத்தை அதிகரிக்க முற்படுவதையும் காட்டி நிற்கிறது. ஜனாதிபதியின் நிறைவேற்றுஅதிகாரங்களே இனப்பிரச்சினைத் தீர்விற்கும், அரசு-புலிகளபேசுவதற்கும் தடையாகஅமையுமென அரசுகருதுமாயின்ஜனாதிபதி ஆட்சிமுறையை இல்லாதொழிக்க முயற்சி செய்திருக்க முடியும்.

ஜனாதிபதியின் அதிகாரக் குறைப்பை விடுத்து ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிப்பதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜே. வி. பியும் ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளன.

இந்நிலையில் பிரதமர் ரணில் தலைமையிலான அரசு உண்மையிலேயே இனப்பிரச்சினைக்கு ஜனாதிபதியின் அதிகாரங்களே தடையாக இருக்குமெனக் கருதுமாயின் ஜனாதிபதி முறை ஒழிப்பதற்குப் பின்நிற்கத் தேவையில்லை.

ஆக ஜனாதிபதியின் அதிகாரக்குறைப்பேயொழிய ஜனாதிபதி முறையை ஒழிக்க முடியாதென அரசு கருதுமாயின் அது தனது எதிர்கால நலன் கருதியமுடிவாக இருக்க முடியுமேதவிர நாட்டின் நலன் கருதியல்ல.

# வடக்கில் சேவை செய்யும் மனப்பான்மையுள்ள மருத்துவர்கள் உருவாகுவது சாத்தியமானதா?

**நி. சரவணபவன்**

12 08-2002 வலம்புரிப் பத்திரிகையில்'பணம் படைத்தவர்கள் மனம் வைத்து உதவிடில் பல்கலைஅனுமதிகிடையாதோர்பயனடைவர்' என்ற தலைப்பில் மருத்துவத்துறையில் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்களுக்கு உதவிட விமானம், கப்பல் என்பன வைத்தோடும் கோடீசுவரர்களும், எமது பாராளுமன்ற உறுப்பினர்களும் உதவிட வேண்டும் எனக் கோரப்பட்டிருந்தது.

முன்னர் மூளாயில் சிறிது காலம் இயங்கிய தனியார் மருத்துவக்கல்லூரியைக் குறிப்பிட்டு இது போன்றதொருமருத்துவக் கல்லூரியை மீண்டும் எம் மண்ணில் ஆரம்பிக்க வேண்டும்என்பதே கட்டுரையாளரின் ஆதங்கமாக இருந்தது இது தொடர்பான சிலகருத்துக்களைமுன்வைத்து அலசுவதுபொருத்தமாகஅமையும்.

### யாழில் சேவை செய்பவர்களுண்டா

பகலிரவாய் படித்துபல் கலைக்கழகத்தில் மருத்துவக் கற்கை நெறியினை பூர்த்தி செய்து வெளியேறியோர் இது வரையில் ஏராளம் பேர்கள். அவர்களில் எமது மண்ணில் சேவையாற்றுவதை நோக்கமாகக் கொண்டு எமது வைத்தியசாலைகளில் பணியாற்றியவர்கள் எத்தனை பேர்கள்? முன்னைய மூளாய் தனியார் மருத்துவக் கல்லூரியில் தமது கல்வியை ஆரம்பித்து பெரும் போராட்டத்தின் பின் பல்கலைக்கழகத்துடன்இணைந்து பட்டம் பெற்றவர்கள் கூட எமதுமக்களுக்குசேவையாற்றினார்களா? எங்கு கற்றிருப்பினும் அவர்கள் தமது தொழிலை சேவையாகக்கருதியிருப்பின் நோய்யுற்றுள்ள எமதுசமூகத்துக்கு கைகொடுத்திருப்பர். யாழ். போதனா வைத்தியசாலையிலும்மருத்துவர்கள் பற்றாக்குறை ஏற்பட்டிருக்காது நிலைமைஇவ்வாறிருக்க யாழ் போதனா வைத்தியசாலையில் மருத்துவர்கள் பற்றாக்குறையை நிரபபுவதற்காக மாணவர்களை தெரிவு செய்து பயிற்றலாம் எனஎதிர்பார்ப்பது ஏற்புடமை அன்று. அவ்வாறு தெரிவு செய்யப்படுபவர்கள் தமது கற்கை நெறியின் பின் யாழ். போதனா வைத்தியசாலையில் தான்கடமையாற்ற வேண்டும் என்ற நியதி ஏதும் இல்லை.

### சேவையுள்ளம் யாரிடம்

எமது குடாநாடு 'மருந்துப் பொருட்களைஇறக்குமதிசெய்வதும் மருத்துவர்களை ஏற்றுமதி செய்வதுமான' போக்கிலேயே சென்று கொண்டிருக்கின்றது மருத்துவர்கள் சீதனச் சந்தையில் உச்சவிலை போவதாலும், வசதி வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்காகவும் தென்னிலங்கைக்கும் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறார்கள். இவ்வாறு குடா நாட்டை விட்டு வெளியேறும் மருத்துவர்கள் தமது உறவுகளைபார்க்கவரும் போதாயினும் ஒரு குறுகிய காலத்துக்காயினும் எமது வைத்தியசாலைகளில் பணியாற்றும் சேவையுள்ளம் கொண்டிருப்பதில்லை. ஒரு சிலர் மட்டும் விதிவிலக்கானவர்கள். ஏனையோர் தமது உறவுகளுக்கு சிகிச்சையளிக்க வைத்தியசாலையில் உள்ள வசதிகளைப் பயன்படுத்த வேண்டியுள்ளபோது, மட்டுமே வைத்தியசாலையின் வாயிலை நாடுவதுண்டு. உண்மையில் இன்று குடா நாட்டுமக்களுக்கு வைத்திய சேவைதன்னலமற்ற சில மருத்துவர்கள், மருத்துவ அதிகாரிகள், ஆயுள் வேத மருத்துவர்கள் போன்றோரின் அர்ப்பணிப்பு மூலமே கிடைக்கப்பெறுகிறது.

### வருடம் ஆறு இலட்சம்

குடாநாட்டில் மீண்டுமொரு மருத்துவக் கல்லூரி தாபிப்பதால் மருத்துவர்கள் பற்றாக்குறை நிலைமை மாறப் போவதில்லை. தென்னிலங்கையில் உள்ள ஒரு தனியார் மருத்துவக் கல்லூரியில் கல்வி கற்க மாணவன் ஒருவனுக்கு சுமார் ஆறு இலட்சம ரூபாவுககு மேல் வருடாந்தம் செலவேற்படுவதாக அறிய முடிகிறது.

சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் மூளாயில் தாபிககப்பட்ட தனியார் மருத்துவக் கல்லூரியை தாபிப்பதில் குடாநாட்டில் மருந்துவ சேவையில் பிரபலமடைந்திருந்த அமரர் வைத்திய கலாநிதி பிலிப் முன்னோடியாக விளங்கியுள்ளார். அவர் குடாநாட்டிலுள்ள சாதாரண குடும்பத்து மாணவனையே மனக்கண் இருத்தி மருத்துவக் கல்லூரியை தாபித்தார். அவரது முயற்சிக்கு வேறும் பலர் உந்துதவளித்தனர். அவரது சிந்தனையில் வியாபார நோக்கு என்ற அலை வீசவில்லை. அவர் வியாபர தந்திரோபாயங்களைக்கையாண்டு பெரும் தொகைப் பணத்தை சுளையாகக் கறக்க விரும்பவில்லை. தெரிவு செய்யப்பட்ட மாணவருக்கு ஒரு இலட்சம் ரூபாவைப் பெற்றுக்கொண்டு அனுமதி வழங்கினார். கற்கை நெறியின் போது தேவையேற்படின் பின்னர் கேட்கப்படும் என்ற வேண்டுதலுடன், பாடசாலையில்ஒரு பிள்ளையைச் சேர்ப்பதற்கே நன் கொடை அறவிடும் எம்மவர்கள் மருத்துவக் கல்லூரிக்கு இன்று சும்மாவா அனுமதிப்பார்கள்? எனவே இங்கு மருத்துவக் கல்லூரி தாபிக்கப்படின் அதன் கற்கைநெறிக்கான கட்டணம் எவ்வாறிருக்கும் எனச் சொல்ல வேண்டியதில்லை

### பேராசிரியர்கள் எங்குள்ளனர்?

மருத்துவக் கல்லூரிக்கு கற்பித்தல் புலமைமிக்க பேராசிரியர்கள், விரிவுரையாளர்களை எங்கிருந்து வரவழைப்பது? யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆசான்கள் சிலர் உதவலாம். எனினும் தென்னிலங்கையிலிருந்து சிலரை அழைக்கும் சந்தர்ப்பங்களும் ஏற்படலாம். யாழ்-கொழும்பு போக்குவரத்து தற்போது சீரடைந்துள்ள போதும் கொழும்பில் தமது தனிப்பட்டசேவையைநிறுத்தி விட்டுசேவை உள்ளத்துடன் இங்கு வருவார்களா? அவர்களது தனிப்பட்ட சேவைக் கட்டணத்துக்கு நிகராக வழங்குமாறு கேட்கமாட்டார்களா?

இந்த மருத்துவக் கல்லூரிக்கு அரசின் அங்கீகாரம் கிடைக்குமா? முன்னர் தென்னிலங்கை தனியார் மருத்துவக் கல்லூரியை அரசு அங்கீகரித்தபோது மூளாய் மருத்துவக் கல்லூரியை அங்கீகரிக்க பின்னடித்தமை கடந்தகால நிகழ்வாகும்.

வர்த்தகர்களை மையமாகக் கொண்டு தாபிக்கப்படும் மருத்துவக் கல்லூரி வர்த்த நோக்கின்றிச் செயற்படும் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? அரசியல் வாதிகளான நாடாளுமன்ற உறுப்பினர்களின் உதவியும் அரசியல் தலையீட்டுக்கும் நேர்மையீனமான அனுமதிக்கும் வழிவகுக்கலாம் அல்லவா?

நிதி வாய்ப்புடைய பெற்றோர் மருத்துவத்துறைக்கு அனுமதிமறுக்கப்படும் போது தமது பிள்ளைகளை இந்தியா போன்றநாடுகளுக்கு அனுப்பி அவர்களைமருத்துவர்களாக்கி விடுவர். அவ்வாறான பெற்றோருக்கு இங்கு தனியார் மருத்துவக்கல்லூரி அமைவது ஒரு வரப்பிரசாதமாக அமையலாம். ஆனால் சாதாரண பெற்றோரின் பிள்ளைகளின் கதி என்ன?

### வைத்திய கலாநிதி 'பிலிப்'பின் சேவை

அமரர் வைத்திய கலாநிதி பிலிப் போன்று ஒரு புலமை மிக்க மருத்துவர் அல்லது மருத்துவர்கள்பலர்இணைந்து ஒரு குழுவாக எமது மக்களின் நன்மை கருதி ஒரு மருத்துவக் கல்லூரியை வடக்கில் தாபிக்க முன்வருவார்களா? நிதி வாய்ப்புடைய பெற்றோரின் பிள்ளைகளிடம் கூடிய கட்டணம் அறவிடலாம். வசதிவாய்ப்பு அற்ற பெற்றோரின்பிள்ளைகளிடமிருந்து குறைந்த-நியாயமான கட்டணத்தை அறவிடலாம். இச்சமநிலையில் நின்று சேவையாற்றலாம் அல்லவா? குடா நாட்டில் கல்வி கற்று தென்னிலங்கைக்கும் வெளிநாடுகளுக்கும் ஓடிச் சென்ற எமது மருத்துவர்கள் இப்போதுள்ள அமைதி நிலைமையினைப் பயன்படுத்தி சேவையுள்ளத்துடன் இணைந்து மருத்துவக் கல்லூரியை மலரச் செய்வார்களா? மருத்துவக் கல்லூரிக்கான 'வன ஊற்று' இவர்கள் தான். குடா நாட்டிலும் தென்னிலங்கையிலும், வெளிநாட்டிலும் வதியும் மருத்துவர்ககளுக்கு இச் செய்தி ஓர் அறைகூவலாகட்டும். சிந்தித்து நன்றே செயற்படுவார்கள் என சமூகம் எதிர்பார்க்கின்றது. ●


## தினசரி தியானம்

### இந்தியாவின் சாதி

இந்திய மக்கள் சிறப்பாக ஆன்மீக நோக்குஉடையவர்கள், அவர்களுக்குக் கண்ணுக்குத் தெரியும் பொருள்கள் தற்காலிகமானவை, கண்ணுக்குப்புலப்படாதவை, சாசுவதமானவை. இந்தியாவின் சாதி, மனித சாதிக்கு வேதாந்த ஒருமைப் பாட்டையும், அகிம்சையையும் எடுத்துச் சொல்வதாகும். இந்தியா சந்நியாசிகள், ஞானிகள், தீர்க்கதரிசிகள் மற்றும்யோகிகளின் துணையுடன் எப்போதும் ஆன்மீகத்தில் பற்றுடைய நாடாகவே இருக்கும். இந்தியாவால் தான் பிறநாடுகளுக்கு யோகங்களையும் வேதாந்தங்களையும்கற்றுக் கொடுக்க முடியும். இது இறைவனது கட்டளையாகும்.

சுவாமி சிவானந்தர்


# தச்சனாமடுப் படுகொலை விசாரணை ஒத்திவைப்பு

(மன்னார்)

தச்சனாமடுப் பகுதியில் இடம்பெற்ற முக் கொலை வழக்கு விசாரணை நேற்று முன் தினம் மன்னார் மாவட்ட நீதிமன்றில் நீதிபதி. எம்.பி.முகைதீன் முன்னிலையில் நடை பெற்றது.

இவ் வழக்கு விசாரணையில் சந்தேக நபர்கள் 13 பேரும் மன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவ் வழக்கு விசாரணை தொடர்பான தடயப் பொருட்களை விடுதலைப் புலிகளிடம் பெற்று, மன்றில் சமர்ப்பிக்க வேண்டுமென்று கடந்த நீதிமன்ற அமர்வில் வவுனியா பொலிஸாருக்கு நீதிபதி உத்தரவிட்டிருந்தார்

எனினும் நேற்றையவழக்கு விசாரணையில் வவுனியா பொலிஸார் மன்றில் தடயப் பொருட்களுடன் ஆஜராகவில்லை.

இதனால் வழக்கு விசாரணைஎதிர் வரும் 2 ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (இ)

# மீளக்குடியமர்ந்தோர்க்கு மருத்துவ வசதிகள்இல்லை

(தென்மராட்சி)

புங்குடுதீவிலுள்ள 7 வட்டாரங்களில் இதுவரை, 700 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ள போதிலும் அவர்களுக்கான மருத்துவ வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படவில்லை.

அங்கு மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்கள் தமக்கானவைத்தியத் தேவைகளுக்குப் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளன.

அதேவேளை இக்குடும்பங்களின் வீடு, குடிநீர், மலசலகூடம், போக்குவரத்து, கல்வி, தொழில்வாய்ப்பு போன்ற அவசர பிரச்சினைகளுக்கு இன்னமும் தீர்வுகள் காணப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

புங்குடுதீவிலுள்ள 1,4,5, 6ஆம்வட்டாரங்களில் 500 குடும்பங்களும் 8,9,10 ஆம் வட்டாரங்களில் 200 குடும்பங்களும் மீளக்குடியமர்ந்துள்ளனர். (உ-77)

# யாழ்.மாநகர சபைக்கு ரூ.12 இலட்சம் அன்பளிப்பு

## அமைச்சர் தயானரத்ன வழங்கினார்

யாழ் மாநகர சபையின் பயன்பாட்டுக்கென உழவு இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு சுகாதார அமைச்சர் பி. தயாரத்ன 12 இலட்சம் ரூபா பெறுமதியான காசோலை ஒன்றை வழங்கியுள்ளார்.

கொழும்பு சென்றுள்ள யாழ. மாநகர சபை முதல்வர் எஸ். கந்தையன் அமைச்சரிடமிருந்து காசோலையை நேற்று முன்தினம் பெற்றுக் கொண்டார்.

முதல்வரின் வேண்டுகோளுக்கு அமையவே அமைச்சர் 12 இலட்சம் ரூபா பெறுமதியான காசோலையை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (த)

# பனை ஓலைச் சார்வு கொள்வனவு

தரமான பனை ஓலைச் சார்வு பனை அபிவிருத்திச்சபையால்கொள்வனவு செய்யப்படுகின்றது. ழெங்க விரும்புவோர் தங்கள் பகுதியிலுள்ள சபையின் கற்பக விற்பனை நிலையங்களில் அல்லது தலைமைச் செயலகத்தில் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| பெரியது | 15 ரூபா. |
| நடுத்தரம் | 12 ரூபா |
| சிறிது | 10 ரூபா. |

தலைமைச் செயலகம்
இல. 53, கண்டி வீதி
பனைஅபிவிருத்திச் சபை
யாழ்ப்பாணம்.

தலைவர்
பனை அபிவிருத்திச் சபை

(கி-4869)

யறிபிடீஸின் கிரேக்க நாடகம் சிங்களத்தில்

# ட்ரோஜனத்துப் பெண்கள்

நெறியாள்கை: தர்மசிறி பண்டாரநாயக்கா
காலம்: 23. 08. 2002 வெள்ளிக்கிழமை
நேரம்: பி.ப. 3மணி
இடம்: யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

திருமறைக்கலா மன்ற அலுவலகத்தில் இலவச அனுமதிச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

(5830)

# மரண அறிவித்தல்

## திருமதி இராசம்மா நடராஜா

(இளைப்பாறிய ஆசிரியை- இராசம்மா ரீச்சர்)

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா நடராஜா நேற்று (20. 8. 2002) செவ்வாய்க்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா நடராஜாவின் (மின் முகாமி) அன்பு மனைவியும், நாகரஞ்சினியின் அன்புத் தாயாரும், திரு. வே. ஞானோதரனின் (முகாமையாளர்- இலங்கை வங்கி) அன்பு மாமியும், றஜீவ் (London), அபிரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற அன்னம்மா அருளம்பலம், மற்றும் செல்லம்மா இரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியை), நடராஜா (இரத்தினம்), காலஞ்சென்ற தியாகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.8 2002) புதன்கிழமை மாலை 5 மணிக்கு வவுனியா இலங்கை வங்கி முகாமையாளர்விடுதியில்நடைபெற்று, பூதவுடல் வவுனியா இறம்பைக்குளம்இந்து மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
வே. ஞானோதரன்
முகாமையாளர்
இலங்கை வங்கி
வவுனியா

(C- 4868)

# பிரதமர் இந்தியா செல்லவுள்ளார்

(கொழும்பு)

பிரதமர் ரணில்விக்கிரமசிங்க நான்குநாள் தனிப்பட்ட விஜயமாக நாளை மறுதினம் இந்தியாவுக்குச் செல்லவுள்ளார்

இந்தியாவுக்குச்செல்லும் பிரதமர் அங்குமுக்கியமான அரசியல் தலைவர்களைச்சந்தித்து கலந்துரையாடுவார் என்றுஎதிர்பார்க்கப் படுகிறது

இதேவேளை சமாதான முயற்சிகள நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் பிரதமர் இந்தியாவுக்குச் செல்வது பலவித சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது (இ)

## தலைவர்

படைக்க வேண்டுமென்ற கோரிக்கையை, அடிக்கடி ஞாபகப்படுத்த வேண்டிய தேவை எமக்கு இல்லை.

இலங்கையில் சமாதானம் ஏற்பட வேண்டுமென்பது தற்போதைய நிலையில் மிக முக்கியமான விடயம்.

இதனை ஏற்படுத்தும் வகையில் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டுமென்பதை இந்தியா விரும்புகிறது.

ஏனெனில் இலங்கையில் அமைதியின்மை காணப்படுவது இலங்கைக்கு மட்டும் பாதிப்பை ஏற்படுத்தும் பிரச்சினையல்ல. தென்னாசியப் பிராந்தியத்திற்கும் இவ்விடயம் பாதிப்பாக அமைவதனாலேயே. இந்தியா இலங்கையின் சமாதான முயற்சிக்கு பூரண ஆதரவு தெரிவித்து வருகிறது என்றும் ஜஸ்வந் சிங்காகூறினார். (இ)

## பாராளுமன்...

ளுமன்றத் தேர்தல் களையும் ஒருஜனாதிபதித் தேர்தலையுமசந்தித்திருக்கிறார்கள்

இதனால மக்கள்மீண்டும் ஒரு பாராளுமன்றத் தேர்தலைச் சந்திகக தயாராக இல்லை என்றும் அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

## வேலணை

என்பவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

இவ்வழக்குடன் தொடர்புடையவரென கருதப்படும் வேலணை பிரதேச சபைத் தலைவர் நமசிவாயம் கருணாகரகுருமூர்த்திக்கு வவுனியா நீதிமன்றம் வழங்கிய பிணை உத்தரவுக்கு அமைய25 ஆயிரம் ரூபா சரீரப்பிணையில் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

இதேவேளை இவ்வழக்கின் சந்தேக நபரான யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா மதனராஜன் தொடர்ந்தும் பிணையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வழக்கு விசாரணைகள் இன்றும் நடைபெறவுள்ளது. (இ)

### வாடகைக்கு

யாழ்ப்பாணம் சிவன் பண்ணை வீதியில் சிற்றிபோய் தையலகத்திற்கு அருகில் உள்ள இரு பெரிய கடைகளும் அதற்குப் பின்னால் உள்ள ஸ்ரோர் அதனுடன் கூடிய சிறிய கடை5 என்பன வாடகைக்கு உண்டு.

**தொடர்பு;**
இராசையா சாவித்திரி
65,சிவன்,பண்ணை, வீதி
யாழ்ப்பாணம்

(5782)

# தெல்லியூர் வைத்தியசாலை ப.நோ-கூ.ச.கையளிப்பு

(ஏழாலை)

தெல்லிப்பழை புற்றுநோயாளர் வைத்தியசாலை மற்றும் தெல்லிப்பழை பலநோக்குக்கூட்டுறவுச் சங்க கட்டடங்கள் உரியநிர்வாகத்திடம் நேற்று ஒப்படைக்கப்பட்டன

நேற்று மாலை 3.30 மணியளவில் நடைபெற்ற கட்டட கையளிப்பு நிகழ்வில் வடபகுதி இராணுவத்தளபதி சரத்பொன்சேகா 515வது பிரிகேட் கொமாண்டர்யாழ்மாவட்ட இராணுவத் தளபதி பிரிகேடியர் இரத்தின சபாபதி தெல்லிப்பழைப்பிரதேச செயலர் திருமதிபதினியம்மா மாகாணசுகாதாரப்பணிபாளர் டாக்டர் செல்வி.உ சிவபாதசுந்தரம் உட்படப்பலர் கலந்துகொண்டனர்

நேற்றுமுன்தினம் இக் கட்டடக்கையளிப்பு நடைபெறுவதாக இருந்து நேற்றைய தினமே கட்டடக் கையளிப்பு இடம்பெற்றது (த-12)

## மினி உலக கிண்ணப் போட்டி இலங்கை கிரிக்கெட் வீரர்கள் விபரம்

(கொழும்பு)

செப்டெம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள ஐ. சி. சி மினி உலகக்கிண்ணப் போட்டிகளுக்கு இலங்கை கிரிக்கெட் அணியிலிருந்து சனத் ஜெயசூர்ய, மாவன் அத்தபத்து, குமார் சங்ககார, மகேல ஜயவர்த்தன, அரவிந்த டி சில்வா, ரஸல் ஆர்னோல்ட், ஹஷாந்த பெர்னாண்டோ, சமிந்த வாஸ், தில்ஹார, பெர்னாண்டோ, முத்தையா முரளீதரன் உபுல் சந்தன, திலகரட்ண டில்ஷான், புலஸ்தி குணரட்ண, குமார் தர்மசேன ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர், (உ-3)

## அமெ...

ளார்.

இதேவேளை இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலேயே இவரின் விஜயம் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ- 6)

## கட்டடம் அமைப்பு துரிதம்

(கோப்பாய்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல கல்லூரியின் சொந்தக் கட்டட அமைப்பு வேலைகள் துரித கதியில்நடைபெற்றுவருகின்றன.

இவ்வருட இறுதிக்குள் வேலைகள் பூர்த்தி செய்யப்படும் எனவும் எதிர்வரும்ஜனவரி மாதம் தொடக்கம சொந்தக் கட்டடத்தில் இதன் நடவடிக்கைகள் இடம் பெறும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (உ-79)

திருமறைக் கலாமன்றம்
வழங்கும்
ஸ்பார்ட்டக்கஸ்
(நாடகம்)
ஒகஸ்ட் 30, 31
செப். 01. 2002
(வெள்ளி, சனி, ஞாயிறு)
மன்ற அரங்கில் மாலை
6.45மணி (4867)

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக்கட்டுரைகள் சம்பந்தப்பட்ட ஆங்கிலமொழி பெயர்ப்புக்கள் மற்றும் பிறப்பு திருமண, மரணச்சான்றிதழ்கள் உட்பட சகலவிதமான மொழிபெயர்ப்பு வேலைகள், கடவுச்சீட்டு, விசா படிவங்கள் நிரப்புதல், தமிழ் ஆங்கில சிங்கள மூலமான சகலவித, கடிதங்கள் யாவும் கணனி மூலம் தயாரித்துத் தரப்படும்.

TUITION AND SECRETARIAL SERVICES
46, Pirappankulam Lane,
Vannarpannai, Jaffna – T.P.3520

(8335)

# 2வது பிறந்தநாள் வாழ்த்து
## 21-08-2002

கொக்குவில் நந்தாவில் அம்மன்கோவிலடியைச் சேர்ந்த திரு. திருமதி ரசிக்குமார்-புஸ்பராணி தம்பதிகளின் செல்வப் புதல்வன்

## ரதுஷசன்

அவர்கள் பல்கலையும் கற்று நல்லூர்க்கந்தனின் அருளால் வாழ வாழ்த்துகிறேன்.

கந்தர்மடம் (5839) க. லங்கேஸ்வரன்

கலைஞர் 'தமிழ்க் கலைக்காவலன்'
செல்லையா மெற்றாஸ்மயில்

# கௌரவிப்பு விழா

எம்மால் ஒழுங்கு செய்யப்பட்ட மேற்படி மாபெரும் விழா 07-09-2002 சனிக்கிழமை யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இடம்பெறவிருக்கிறது.

இவ்விழாவை நடாத்த ஏற்கனவே பலர் பங்கு கொண்டுள்ளனர். மேலும் யாராவது ஏதாவது பங்கு கொள்ள விரும்பினால் பின்வரும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

திரு. பொன் தர்மேந்திரன், அமைப்புர்குழுத்தலைவர்
இல. 10, செல்லர் லேன், செம்மணி வீதி,
நல்லூர்.

(5834) அமைப்புக்குழு

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தினரால் இல, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 21 -08-2002இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.